மோட்டார் வாகன விபத்து இழப்பீடு கோருரிமை தீர்ப்பாயம்/
முதலாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம்,
இராணிப்பேட்டை, இராணிப்பேட்டை மாவட்டம்.

**முன்னிலை : திரு.M. செல்வம், M.L.,**
முதலாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, (மு.கூ.பொ)
இராணிப்பேட்டை.

2024 ஆம் வருடம் அக்டோபர் திங்கள் 16 ஆம் நாள் புதன்கிழமை

**மோ.வா.வி.இ.அசல் மனு எண்.303/2022**
**(CNR.No.TNVL120009172022)**

1. ஷகிலா பேகம், வயது 47, க/பெ. லேட் B. அன்வர் பாஷா,

2. A. முகமது அஜ்மல் பாஷா, வயது 26, த/பெ.லேட் B. அன்வர் பாஷா,

3. A. வசீம் பாஷா, வயது 19, த/பெ. லேட் B.அன்வர் பாஷா,

4. இளவர் A. பமீனா பேகம், வயது 17, த/பெ. லேட் B.அன்வர் பாஷா,

5. இளவர் A. நிஜாமுதீன், வயது 14, த/பெ. லேட் B.அன்வர் பாஷா,

Minor petitioners 4 and 5 are represented by their mother and natural guardian, 1st petitioner.

6. A.நூருன்னிசா, வயது 74, க/பெ. பக்கிர் அஹமத்

அனைவரும் வசிக்குமிடம் எண்.2/542B, J.B.N. நகர், தென்நந்தியாலம் கிராமம் இரத்தினகிரி அஞ்சல், வாலாஜா தாலுக்கா, இராணிப்பேட்டை மாவட்டம். ....மனுதாரர்கள்.

//எதிர்//

1. R. காந்தி, வயது 52, த/பெ. ராஜா, வசிப்பிடம் எண்.2/26, பள்ளி வட்டம், கொணப்பட்டு, புதகரம், பெரியகொணப்பட்டு, திருப்பத்தூர் மாவட்டம்.

2. G. தங்கமணி, த/பெ. காந்தி, வசிப்பிடம் எண்.2/26, பள்ளி வட்டம், கொணப்பட்டு, புதகரம், பெரியகொணப்பட்டு, திருப்பத்தூர் மாவட்டம். ....எதிர்மனுதாரர்கள்.

கடந்த 08.06.2022 அன்று ஏற்பட்ட சாலை விபத்தில் இறந்த 1ம் மனுதாரரின் கணவரும், 2 முதல் 5 மனுதார்களின் தந்தையும், 6ம் மனுதாரரின் மகனுமான அன்வர் பாஷா என்பவருக்கு இழப்பீடாக எதிர்மனுதார்கள் ரூ.50,00,000/– வழங்கக்கோரி மோட்டார் வாகன சட்டம் பிரிவு 166ன் கீழ் இம்மனு மனுதார்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த மனு கோப்பிற்கு எடுக்கப்பட்ட நாள் 03.11.2022.

நீதிமன்றக் கட்டணம் ரூ.49,372/– செலுத்துவதிலிருந்து இ.ம.எண்.1/2022, 03.11.2022 ஆம் தேதி படி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. (மனுதாரர்களுக்கு வழங்கப்பட்டுள்ள இழப்பீட்டுத் தொகைக்கான நீதிமன்ற கட்டணம் ரூ.13,730/– யை மனுதாரர்கள் 21.10.2024 ஆம் தேதி e–Court fee செலுத்தியுள்ளார்.)

இம்மனுவானது என்முன்பாக இறுதி விசாரணைக்கு 20.09.2024 அன்று கொண்டுவரப்பட்டு, மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.R.முகமது அலி, அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜரின்மையால் தோன்றா தரப்பினராக கருதப்பட்டும், மனுதாரர்கள் தரப்பு வாதுரைகள் மற்றும் ஆவணங்கள் பரிசீலனை செய்து, இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**<u>தீர்ப்பாணை</u>**

1. இம்மனு பகுதியாக அனுமதிக்கப்பட்டு, மனுதாரர்களுக்கு 1ம் எதிர்மனுதாரர் இழப்பீட்டுத் தொகையாக **ரூ.14,37,696/–** (ரூபாய் பதினான்கு லட்சத்து முப்பத்தி ஏழாயிரத்து அறுநூற்று

தொண்ணூற்றாறு மட்டும்) யை மனு தேதி முதல் தொகை முழுவதும் செலுத்தும் காலம் வரை மனுதாரர்களின் தவறுகை காலம் இருப்பின் அதனை நீக்கி 7.5% வட்டியுடனும், மனு செலவுத்தொகையுடன் செலுத்த வேண்டுமென்றும்

2. மேற்படி இழப்பீட்டு தொகையினை 1ம் எதிர்மனுதாரர் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்ட ஒரு மாத காலத்திற்குள் மோட்டார் வாகன இழப்பீட்டு கோரிக்கை தீர்ப்பாயர்/முதலாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி, இராணிப்பேட்டை என்ற பெயரில் ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா, வாலாஜா கிளை வங்கி கணக்கு **எண்.42816935163 (IFSC Code SBIN0000775)**ல் வைப்பீடு செய்யவேண்டும் என்றும்

3. மேற்படி இழப்பீட்டுத் தொகையில் 1ம் மனுதாரருக்கு ரூ.5,37,696/-ம், 2, 3 மனுதார்கள் மற்றும் 4, 5 இளவர் மனுதார்களுக்கு தலா ரூ.2,00,000/-ம், 6ம் மனுதாரருக்கு ரூ.1,00,000/-ம் கிடைக்கத்தக்கது என்றும்

4. 1 முதல் 3 மற்றும் 6 மனுதாரர்கள் அவரவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள இழப்பீட்டுத் தொகைக்குரிய வட்டி மற்றும் செலவுத்தொகையுடன் பெற்றுக் கொள்ளலாம் என்றும்,

5. 4, 5 இளவர் மனுதாரர்களுக்கு வழங்கப்பட்டுள்ள இழப்பீட்டுத் தொகையினை அவர்கள் மேஜர் ஆகும் வரை ஏதாவது ஒரு தேசியமயமாக்கப்பட்ட வங்கியில் வைப்பீடு செய்யப்பட வேண்டும் என்றும் வைப்பீட்டு தொகையிலிருந்து கிடைக்கும் வட்டியை 4, 5 இளவர் மனுதாரர்களின் பாதுகாவலரான 1ம் மனுதாரர், அவர்களது நன்மைக்காக 3 மாதத்திற்கு ஒரு முறை பெற்றுக் கொள்ளலாம்

என்றும் 4, 5 மனுதாரர்கள் மேஜர் ஆனவுடன் மனுதாக்கல் செய்து அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள இழப்பீட்டு தொகையினை அவர்களது வங்கி கணக்கில் பெற்றுக்கொள்ளலாம் என்றும்

6. மனுதாரர்களுக்கு வழங்கப்பட்டுள்ள இழப்பீட்டுத் தொகைக்கான பாக்கி நீதிமன்ற கட்டணம் **ரூ.13,730/-** மனுதாரர்கள் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்ட தேதியிலிருந்து 10 நாட்களுக்குள் செலுத்தவேண்டும் என்றும், தவறும் பட்சத்தில் நீதிமன்ற கட்டணம் செலுத்தும் தேதி வரை இழப்பீட்டுத் தொகைக்கான பின்வட்டி மனுதாரர்களுக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றும் உத்தரவிடப்படுகிறது. (மனுதாரர்களுக்கு வழங்கப்பட்டுள்ள இழப்பீட்டுத் தொகைக்கான நீதிமன்ற கட்டணம் ரூ.13,730/- யை மனுதாரர்கள் 21.10.2024 ஆம் தேதி e-Court fee செலுத்தியுள்ளார்.)

7. வழக்கறிஞர் ஊதியம் **ரூ.33,877/-** என்றும், மனுதாரர்களுக்கு வழங்கப்பட்டுள்ள இழப்பீட்டுத் தொகை அவரவர்கள் வங்கிக் கணக்கில் நேரிடையாக NEFT/RTGS மூலம் வழங்கப்படும் என்றும் உத்தரவிடப்படுகிறது.

8. 2 ம் எதிர்மனுதாரர் பொறுத்து மனு தள்ளுபடி செய்யப்படுகிறது.

9. மனுதாரர்களுக்கு, 1 ம் எதிர்மனுதாரர் மனு செலவுத்தொகையாக ரூ.47,827/- கொடுக்க வேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது.

2024 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 16 ஆம் நாள் என்னுடைய கையெழுத்தும், இந்நீதிமன்ற முத்திரையும் போடப்பட்டது.

(ஒம்) M. செல்வம்,
மோட்டார் வாகன விபத்து இழப்பீடு கோருரிமை தீர்ப்பாயர்/
முதலாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,(மு.கூ.பொ.)
இராணிப்பேட்டை மாவட்டம்.

**<u>செலவுப்பட்டியல் விவரம்</u>**

| | மனுதாரர்கள் |
|---|---|
| Stamp for petition | Rs. 13,750.00 |
| Stamp for power | Rs. 10.00 |
| Stamp for exhibits | Rs. ---- |
| Pleader's fees | Rs. 33,877.00 |
| Service of process | Rs. ---- |
| Preparation of process | Rs. ---- |
| Stamp for petition | Rs. 40.00 |
| Cost of pre-suit notice | Rs. 50.00 |
| Cost of marking or getting copies of pleadings, applications & Affidavits | Rs. 100.00 |
| Total | Rs. 47,827.00 |

(ஒம்) M. செல்வம்,
மோட்டார் வாகன விபத்து இழப்பீடு கோருரிமை தீர்ப்பாயர்/
முதலாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, (மு.கூ.பொ.)
இராணிப்பேட்டை மாவட்டம்.